## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பொன்னேரி

அ.வ.எண் 130 / 2010

28.06.2018

வாதி தரப்பு சாட்சி 1, குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் எற்கனவே குறுக்கு விசாரணையில் எனது அத்தை திருமதி.அபூர்வம்மாள் வழக்கில் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ரத்தினரெட்டியாருடைய மகன்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை சேர்க்க மனு எதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என்னுடைய பிராதில் பட்டா பிரதிவாதிகள் பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா மாறியுள்ளது என்று பத்தி 5ல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் வேண்டி வழக்கு ஏதேனு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் முன்பே பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டாவை மாற்றம் வேண்டி எந்த அலுவலகத்திலும் விண்ணப்பிக்கவில்லை என்றால் சரிதான். அபூர்வம்மாளை விடுத்து மற்ற 5 பேரை மட்டும் சேர்த்து வழக்கு தொடுத்து 5ல் ஒரு பாகம் மட்டும் மீண்டும் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் வாதி திருமதி.ரேணுகாவை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க விரும்புகிறேன். 4ம் வாதிக்கு 2 பெண்கள், மற்றும் 1 மகன். 4ம் வாதி 2 பெண்களையும் ரத்தினம் ரெட்டியார் மகன் வாசுதேவனின் மகன்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்கள். நான் 4ம் வாதியுடன் கலந்து ஆலோசித்து இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வாசுதேவனை கலந்து ஆலோசிக்கவில்லை. வாசுதேவனுடைய துண்டுதலின் பேரில் 4ம் வாதி ரேணுகாவிடன் சேர்ந்து போலியாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றாலும் அதனாலேயே ரத்தினத்தின் வாரிசுகளை இந்த வழக்கில் பார்ட்டியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக பட்டாவை தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்து கூட்டு சொத்தாக எந்த ஆவணமும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்தில் ஒரு பகுதி திரு.வாசுதேவன் வசிக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. ரத்தினத்தின் வாரிசுகளான வாசுதேவன் பெயரில் தனியாக ஒரு பட்டா உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ரத்தினம் ரெட்டியார் வாசரிசான வாசுதேவன் மற்றவர்களும் வசித்து வரும் சொத்துகுறித்து என் பிராதில் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிராதில் வழக்கு சொத்து 6 பகுதிகளாக உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின்

LT

பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலமாக அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் என் அப்பாவின் காலத்திலேயே பாகம் பிரித்துவிட்டார்கள் அவர்கள் அனுபவத்தில் உள்ளது. முதல் பிரதிவாதி 2ம் மற்றும் 3 பிரதிவாதிக்கு 16.12.2009ம் ஆண்டு செட்டில்மென்ட் பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்துடைய மதிப்பு 2009ல் சுமார் பத்துலட்சத்திற்கு மேல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கு சொத்தில் வீடு இருந்ததா என்றால் சமையல் அறை இருந்தது. அந்த விபரத்தை எனது பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை குறைந்த மதிப்பீடு செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க வரம்பு இல்லை என்றாலும் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

LTI
லலிதா

திறந்த நீதிமன்றத்தில் எழுதப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக்
கொண்டு என்முன் கையெழுத்து செய்த

மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொன்னேரி